வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி 7.9.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------

தலைப்புச் செய்திகள்

விநாயகர் சதுர்த்தி 1 (16)

நாடு முழுவதும் இன்று விநாயகர் சதுர்த்தி பண்டிகை உற்சாகத்துடனும், பக்தி சிரத்தையுடனும் கொண்டாடப்பட்டு வருகிறது. முழு முதற் கடவுளான கணபதியின் பிறந்த நாளை குறிக்கும் வகையில் கொண்டாடப்படும் இந்த சதுர்த்தி விழா, ஞானம், முன்னேற்றம் மற்றும் வாழ்வின் வளங்களை கொண்டு வரும் நாளாக மக்கள் கொண்டாடி வருகின்றனர். மகராஷ்டிரா மாநிலத்தில் இப்பண்டிகை மிகவும் விமர்சையாகவும், கோலகலத்துடனும் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து விநாயகர் கோவில்களிலும் இன்று காலை முதல் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. சிவகங்கை மாவட்டம், பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோவில், திருச்சி மலைக்கோட்டை உச்சி பிள்ளையார் உள்ளிட்ட பிரசித்தி பெற்ற விநாயகர் கோவில்களில் இன்று காலை முதல் பக்தர்கள்

வழிபாடு செய்து வருகின்றனர். புதுச்சேரி மணக்குள விநாயகர் கோவிலில் இன்று அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு, விநாயகருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் விநாயகருக்கு தங்க கவசம் அணிவிக்கப்பட்டது. பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர்.

வாழ்த்து (14)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், நாட்டின் பல பகுதிகளில் மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இந்த நன்னாளில் விநாயகர் மங்களகரம் ஆனவராகவும், தடைகளை நீக்குபவராகவும் கருதப்படுகிறார் என்று அவர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். மேலும், அனைவரையும் பேரழிவுகளில் இருந்து பாதுகாக்கவும், செழிப்பை உண்டாக்கவும் தாம் பிராத்திப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், விநாயகர் ஞானம், செழிப்பு மற்றும் நல்ல அதிர்ஷ்டத்தின் உருவகம் என்றும், ஒற்றுமை உணர்வு, சகோதரத்துவம் மற்றும் கூட்டு முயற்சியில் உள்ள தடைகளை நீக்க உதவும் கடவுள் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், நாட்டு மக்கள் அனைவருக்கும் தமது விநாயகர் சதுர்த்தி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும், அனைவரின் நலனுக்காக கணபதி பாபாவிடம் தாம் பிராத்தனை செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

*பஞ்சாயத்து □ராஜ் (13)*

ஜம்முவில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்துடன், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் இணைந்து குடியிருப்பு மேலாண்மை திட்டம் குறித்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது. வரும் 9 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி வரை 5 நாள் நடைபெற உள்ள இந்த நிகழ்ச்சியில், ஆந்திரா, சத்தீஸ்கர், கேரளா, மகராஷ்டிரா உள்ளிட்ட 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். இதில் மாவட்ட மற்றும் வட்டார ஊராட்சி பிரதிநிதிகள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், கிராம பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் பிற பஞ்சாயத்து அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர். நிகழ்ச்சியில், தலைமை பண்பு, மேலாண்மை மற்றும் நெறிமுறைகள், வளங்களை திரட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்தல், ஊரக கண்டுபிடிப்பு, திட்டங்களின் மேலாண்மை மற்றும் செயற்கை நுண்ணறிவு குறித்த அம்சங்கள் குறித்து விவாதிக்கப் பட உள்ளது.

அமித் ஷா (14)

ஜம்மு காஷ்மீரில் நடைபெற உள்ள சட்டப் பேரவை தேர்தலுக்கு பிறகு, மாநில அந்தஸ்து மீட்டெடுக்கப்படும் என்று பாஜக மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். இன்று ஜம்முவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், பிரதமர் திரு மோடி ஆட்சிக் காலத்தில் 370 ஆவது பிரிவை ரத்து செய்ததை தொடர்ந்து, தேசிய கொடி மற்றும் அரசியல் அமைப்பின் கீழ், முதன் முறையாக நடைபெற உள்ளதால், இந்த தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் தெரிவித்தார். யூனியன் பிரதேசத்தில் பயங்கரவாத சம்பவங்களை மத்திய அரசு 70 சதவிகிதம் குறைத்துள்ள நிலையில், காங்கிரஸ்-தேசிய மாநாட்டு கூட்டணி ஜம்மு காஷ்மீரில் மீண்டும் பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக அவர் குற்றம் சாட்டினார். ஜம்மு காஷ்மீரில் செப்டம்பர் 18 முதல் 3 கட்டங்களாக நடைபெற உள்ள தேர்தலுக்கான பிரச்சாரத்தை தீவிரப்படுத்த உள்துறை அமைச்சர் 2 நாள் பயணமாக ஜம்மு சென்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

ஏவுகணை (9)

நீண்ட தூரத்தில் உள்ள இலக்கை துல்லியமாக தாக்க வல்ல அக்னி-4 ஏவுகணை ஒடிசா மாநிலம் சந்திப்பூர் கடல் தளத்தில் இருந்து வெற்றிகரமாக பரிசோதிக்கப் பட்டது. இந்தியாவின் பாதுகாப்பிற்கு வலு சேர்க்கும் வகையில் இந்த அக்னி-4 ஏவுகணை அமைந்துள்ளதாகவும், தொழில்நுட்ப ரீதியாக அதன் செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகள், தரையில் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இலக்கை தாக்கவல்ல ஏவுகணைகள், அணுசக்தி ஏவுகணைகள் ஆகிய அனைத்தும் உள் நாட்டிலேயே தயாரிக்கப் பட்டவை என்று அமைச்சகம் பெருமிதம் தெரிவித்துள்ளது.

தேர்தல் (7)

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை 2 ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனுகளின் பரிசீலனை நேற்று நடைபெற்றது. தேர்தலில் போட்டியிட 329 பேர் மனு தாக்கல் செய்திருந்த நிலையில், 267 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டன. 62 மனுக்கள் நிராகரிக்கப் பட்டன. மனுக்களை திரும்ப பெற வரும் திங்கட்கிழமை கடைசி நாளாகும். ஜம்மு காஷ்மீரில்

உள்ள 26 தொகுதிகளில் 2 ஆம் கட்ட தேர்தல் இம்மாதம் 25 ஆம் தேதி நடைபெற உள்ளது. இதனை ஒட்டி, வேட்பாளர்கள் தீவிர பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

விருது (7)

பிரதமரின் தேசிய பால் புரஸ்கார் விருதுகளுக்கு இம்மாதம் 15 ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் அறிவித்துள்ளது. வீரத் தீர செயல் புரிந்த சிறார்களை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்படும் இந்த விருதுகள் வரும் ஜனவரி மாதத்தில் வழங்கப்பட உள்ளன. வீர தீர சிறார் தினமான டிசம்பர் 26 ஆம் தேதியன்று இந்த விருதுகள் அறிவிக்கப்பட உள்ளன. 5 முதல் 18 வயதிற்கு உட்பட்ட சிறார்களுக்கு ஆண்டுதோறும் இந்த விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

*நட்டா* (9)

உலகின் 2 ஆவது பெரிய மருத்துவமனையாக உருவாக்கப்பட்டு வரும் பாட்னா மருத்துவ கல்லூரியின் கட்டுமான பணிகளை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜேபி நட்டா இன்று ஆய்வு செய்தார். சூப்பர் ஸ்பெஷாலிட்டி வசதிகளுடன் கூடிய 5 ஆயிரத்து 400 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையின் கட்டுமான பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு நடத்தினார். இன்று அவர் தர்பங்கா மற்றும் முசாபர்பூரில் 2 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகளை திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். முன்னதாக திரு நட்டா பாட்னாவில் உள்ள தக்த் ஸ்ரீ ஹரி மந்திர் சாகிப்-ற்கு சென்று பிரார்த்தனை செய்தார்.

*ஊட்டச்சத்து மாதம்* (12)

ஆண்டுதோறும் செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை ஊட்டச்சத்து மாதம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் சார்பில், இதுவரை, சுமார், 1 கோடியே 37 லட்சம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. குஜராத் மாநிலத்தில் தொடங்கப்பட்ட இந்த 1 மாத கால இயக்கம் ரத்த சோகை, வளர்ச்சி கண்காணிப்பு, சமச்சீர் உணவு

உள்ளிட்ட முக்கிய கருப்பொருட்களில் கவனம் செலுத்தப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் சிறந்த நிர்வாகத்திற்கான தொழில்நுட்பத்தையும், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையையும் இந்த இயக்கம் வலியுறுத்துகிறது. தாயின் பெயரில் ஒரு மரம் வளர்ப்போம் என்ற இயக்கம் நாட்டில் உள்ள அனைத்து 13.95 லட்சம் அங்கன்வாடி மையங்களிலும் செயல்படுத்தப்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

திறன் மேம்பாடு (10)

திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை இணை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி இன்று தனியார் உணவு உற்பத்தி நிறுவனத்துடன் போக்குவரத்து மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டாண்மை குறித்து புரிந்துணர்வு ஒப்பந்ததில் கையெழுத்திட்டார். புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப் படுத்துவதில் கருத்தில் கொண்டு வணிகத்திற்கு திறன் மேம்பாடு அவசியம் என்றும் கூறினார். தளவாடங்களின் எதிர்காலம் குறித்து பேசிய அமைச்சர், உள் கட்டமைப்பு மற்றும் இணைப்பை மேம்படுத்துதல், உலகளாவிய வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கை

அதிகரிப்பது ஆகியவை 2047 ஆம் ஆண்டில் இந்தியா வளர்ந்த நாடாக மாற உதவும் என்று கூறினார்.

கண்காட்சி 1 (18)

புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள காந்தி திடலில் வடகிழக்கு இந்தியாவின் கொண்டாட்டமான ஆடி அருணிமா கண்காட்சியை முதலமைச்சர் திரு ரங்கசாமி நேற்று திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் திரு ரங்கசாமி, நாடு முழுவதும் உள்ள பழங்குடியின மக்களை மேம்படுத்தும் விதமாக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை மேம்படுத்தி வருவதாகவும், அதன் ஒரு பகுதியாக இந்த பழங்குடியின பாரம்பரிய கண்காட்சி நடத்தப்படுகிறது என்றும் கூறினார். உள்ளூர் மக்களும், சுற்றுலா பயணிகளும் இதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

விழாவில் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் மற்றும் மலைவாழ் மக்கள் கூட்டுறவு கொள்முதல் மற்றும் விற்பனை மேம்பாட்டு நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு கூட்டமைப்பு ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கண்காட்சி 10 நாட்கள்

நடைபெற உள்ளது. வரும் 15 ஆம் தேதி வரை நடைபெறும் இந்த கண்காட்சி தினமும் காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெற உள்ளது. இக்கண்காட்சியில் வடகிழக்கு மாநிலங்களான அசாம், திரிபுரா,

*கண்காட்சி* 2 (6)

மணிப்பூர், நாகாலாந்து, மிசோராம், மேகாலயா மற்றும் அருணாச்சல பிரதேசத்தில் வாழும் மலைவாழ் மக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. கைத்தறி துணிவகைகள், அணிகலன்கள், மரச்சாமான்கள், சுடுமண் கலைபொருட்கள், மண்பாண்டங்கள், கண்கவர் ஓவியங்கள், திரைச்சீலைகள் உள்ளிட்ட பொருட்கள் 30 அரங்குகளில் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளன.

*விளையாட்டு* (11)

பாரீஸ் பாரா லிம்பிக்ஸ் 2024 போட்டியில் இந்தியா இதுவரை, 6 தங்கம், 9 வெள்ளி, 12 வெண்கலம் என மொத்தம் 27 பதக்கங்களை வென்றுள்ளது. இன்று நடைபெற உள்ள போட்டிகளில், பெண்களுக்கான 200 மீட்டர் ஓட்டப்பந்தய இறுதிப் போட்டியில் சிம்ரனும், ஆண்களுக்கான

400 மீட்டர் ஓட்டப் பந்தய இறுதிப் போட்டியில் திலிப் கவித்தும், ஆண்களுக்கான ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் பங்கேற்கின்றனர்.

முன்னதாக, ஆண்கள் குண்டு எறிதல் பிரிவில் வெண்கல பதக்கம் வென்ற ஹோகாடோ ஹோடோஷே சேமாவுக்கு நாகாலாந்து அரசு 1.5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு அறிவித்துள்ளது. திமாபூரை சேர்ந்த 40 வயதான ஹோகாடோ நேற்று நடைபெற்ற போட்டியில் 14.65 மீட்டர் தூரம் குண்டு எறிந்து வெண்கல பதக்கம் வென்று சாதனை படைத்தார்.